# இடம் பொருள் கலைஞர்

102

**மகிழவன்**

பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து, இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் **திரு.வி.க அரசு கலைக் கல்லூரி - திருவாரூர்!**



# திரு.வி.க.அரசு கலைக் கல்லூரி - திருவாரூர்!

## கீழத்தஞ்சையில் உருவான கல்விப் புரட்சி!



முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான அரசு அமைந்தபோதெல்லாம், தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சிக்குத் தனிகவனம் செலுத்தியதை அறிவோம். குறிப்பாக, அவரது ஆட்சிக்காலங்களில் எல்லாம் உயர்கல்வியில் பெரும் புரட்சியே ஏற்பட்டது.

சுதந்திரத்துக்குப் பின்னரான 20 ஆண்டுகால காங்கிரஸ் ஆட்சியில் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்ட கல்லூரிகளின் எண்ணிக்கை 92 மட்டுமே. ஆனால், 1967-ஆம் ஆண்டு முதல் 1975-ஆம் ஆண்டு வரை கழகத்தின் 8 ஆண்டுகால ஆட்சியில் தொடங்கப்பட்ட கலைக் கல்லூரிகளின் எண்ணிக்கை மட்டும் 97 ஆகும். தொடக்கக் காலத்தில் எங்கெல்லாம் கல்லூரி வேண்டும் என கழகம் கோரிக்கை வைத்ததோ, தீர்மானம் நிறைவேற்றியதோ அங்கெல்லாம் கலைஞர் ஆட்சிக் காலத்தில்தான் கல்லூரிகள் உருவாகின.

1966-ஆம் ஆண்டு காலகட்டத்தில் கல்லூரிக் கல்வி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 94 ஆயிரம்தான், ஆனால், கலைஞர் உருவாக்கிய புதிய கல்லூரிகளின் வழியாக, 1975-ஆம் ஆண்டுவாக்கில் கல்லூரிக்கல்வி பயின்ற மாணவ, மாணவியர் எண்ணிக்கை 2 இலட்சத்திற்கும் அதிகமாக உயர்வு கண்டது.

### 'கலைஞர் கருணாநிதி கலைக் கல்லூரி'

அந்த வகையில், திருவாரூர் மண்ணின் மைந்தரான முத்தமிழறிஞர் கலைஞர், திருவாரூர் பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் கல்லூரிக் கல்வி பெறுவதற்கு உருவாக்கிய கலைக் கல்லூரி திரு.வி.க கலைக் கல்லூரி. திருவாரூர் அருகே 'கிடாரங்கொண்டான்' என்கிற இடத்தில் அமைந்துள்ளது.

அன்றைய ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில், கீழத்தஞ்சைப் பகுதி மாணவர்கள் கல்லூரி செல்ல வேண்டும் என்றால், தஞ்சை அருகில் உள்ள பூண்டி புஷ்பம் கல்லூரிக்குத்தான் செல்ல வேண்டும். அல்லது கும்பகோணம் அரசு கலைக் கல்லூரி அல்லது மயிலாடுதுறை ஏ.வி.சி கல்லூரி ஆகியவற்றுக்குச் செல்ல வேண்டும். அதாவது கிட்டத்தட்ட 100 கிலோ மீட்டர் சுற்றளவுக்குக் கல்லூரிகளே இல்லை என்கிற நிலை இருந்தது.

இந்த நிலையை மாற்ற நினைத்த கலைஞர், திருவாரூரை மையமாக வைத்து, கல்லூரி படிக்கும் வாய்ப்பை உருவாக்குவதற்குத் திட்டமிட்டு தொடங்கிய கல்லூரிதான் திரு.வி.க. கலைக் கல்லூரி. அன்றைக்கு, முதலில் சூட்டப்பட்ட பெயர் 'கலைஞர் கருணாநிதி கலை அறிவியல் கல்லூரி'.

### கல்லூரியின் வரலாறு

1970-71 கல்வியாண்டில் இருந்து திருவாரூரில் கல்லூரி தொடங்குவதற்கான அறிவிப்பினை வெளியிட்டார் கலைஞர். அதையடுத்து, திருவாரூர் தியாகராஜ சுவாமி கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் அதே ஆண்டு வகுப்புகள் தொடங்கப்பட்டன. அதையடுத்து நகருக்கு வெளியே 26 ஏக்கர் இடம் தேர்வு செய்யப்பட்டு, கல்லூரி கட்டுவதற்கான அடிக்கல் நாட்டினார் கலைஞர். கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்ட நிலையில், 1972-ஆம் ஆண்டு ஜூன் 2-தேதி, அன்றைய ஆளுநர் கே.கே.ஷா மற்றும் கல்வி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் முன்னிலையில் திறந்து வைத்தார் கலைஞர்.



### பறவை போன்ற கட்டட அமைப்பு

மாணவர்கள் படித்து முடித்து பட்டம் வாங்கிய பின், வேலை தேடி வெளியிடங்களுக்குப் பறக்க வேண்டும் என்பதை உணர்த்தும் வகையில், கல்லூரியின் கட்டட அமைப்பு பறவையைப் போல இருக்க வேண்டும் என்பது கலைஞரின் விருப்பமாக இருந்தது. ஒரு விமானப் பயணத்தின் போது சண்டிகர் நகரில் பறவை போன்ற தோற்றத்தில் அமைந்த கட்டடத்தைப் பார்த்த அவருக்கு, அதே சாயலில் திருவாரூரில் கல்லூரிக் கட்டடம் அமைய வேண்டும் என்ற எண்ணம் இந்தக் கல்லூரியின் மூலமாக நிறைவேறியது.

> **கல்லூரியின் பெயரிலிருந்து கலைஞர் பெயர் நீக்கப்பட்டு இருந்தாலும், கீழத்தஞ்சை மக்களின் கல்வி வளர்ச்சிக்கு கலைஞர் அளித்த கொடை இந்தக் கல்லூரி.**

கல்லூரியின் நுழைவுவாயிலில், பேரறிஞர் அண்ணா அவர்களின் மார்பளவு சிலையை நிறுவியதுடன், கலைநிகழ்ச்சிகளை நடத்துவதற்கு வசதியாக, 'மாதவி' கலை அரங்கத்தையும் திறந்து வைத்தார் கலைஞர்.

### அ.தி.மு.க.வின் காழ்ப்புணர்ச்சி

1977-ஆம் ஆண்டுக்குப் பின்னர், அ.தி.மு.க ஆட்சிக் காலத்தில் கலைஞர் மீதான காழ்ப்புணர்ச்சி காரணமாக, கல்லூரிப் பெயரை மாற்றத் திட்டமிட்டனர். அதற்காக, 1983-ஆம் ஆண்டில், உயிருடன் இருப்பவர்களின் பெயர்களில் அரசுக் கட்டடங்கள் இருக்கக் கூடாது என விதிமுறையை வெளியிட்டதுடன், கலைஞர் கலைக் கல்லூரியின் பெயர் மாற்ற அறிவிப்பினையும் வெளியிட்டனர்.

குறிப்பாக, 1983-ஆம் ஆண்டில் திரு.வி.கலியாணசுந்தரனார் அவர்களின் நூற்றாண்டு விழாவை யொட்டி, திரு.வி.க. அரசு கலைக் கல்லூரி எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டது.

### கற்பிக்கப்படும் துறைகள்

திரு.வி.க. கலைக் கல்லூரி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியாக செயல்பட்டு வருகிறது. ஆரம்பத்தில், இரண்டு துறைகளுடன் தொடங்கப்பட்ட கல்லூரியில், தற்பொது இளநிலைக் கலைப்பாடங்களாக பி.ஏ தமிழ், ஆங்கிலம்,வரலாறு, பொருளியல், இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் துறைகளும், பி.காம்., பி.பி.ஏ பாடங்களும், இளநிலை அறிவியல் பாடங்களாக பி.எஸ்சி. கணிதம் இயற்பியல்,வேதியியல், விலங்கியல், கணினி அறிவியல், காட்சித் தொடர்பியல், தாவரவியல் துறைகளும் உள்ளன.

முதுநிலைக் கலைப்பாடங்களாக எம்.ஏ. தமிழ், ஆங்கிலம், வரலாறு, பொருளியல் மற்றும் எம்.காம்., முதுநிலை அறிவியல் பாடங்களாக எம்.எஸ்சி. கணிதம், இயற்பியல், வேதியியல், விலங்கியல், கணினி அறிவியல், காட்சித் தொடர்பியல் ஆகிய படிப்புகளும் உள்ளன. இன்றைய நிலையில், ஆண்டுக்கு 4,500 மாணவர்கள் இந்தக் கல்லூரியின் வழியாகப் பயன் பெற்று வருகின்றனர்.

கல்லூரியின் பெயரிலிருந்து கலைஞர் பெயர் நீக்கப்பட்டு இருந்தாலும், கீழத்தஞ்சை மக்களின் கல்வி வளர்ச்சிக்கு கலைஞர் அளித்த கொடை இந்தக் கல்லூரி. அதனால் எத்தனை ஆண்டுகளானாலும் மக்கள் மனதில் கலைஞர் புகழ் நிலைத்து, நீடித்து நிற்கும். நிற்கிறது.

...வலம் வருவோம்

## வரலாற்று உண்மைகளைக் கொண்டு வரும் முயற்சி!

தமிழ்நாடு தொல்லியல் துறையும் 'ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக'த்தின் 'சிந்துவெளி ஆராய்ச்சி மையமும்' இணைந்து ஏற்பாடு செய்திருந்த, சிந்துவெளி நாகரிகம் கண்டுபிடித்த நூற்றாண்டு நிறைவு பன்னாட்டுக் கருத்தரங்கம், பல்கலைக்கழக ஆய்வு மாணவர்களிடையே மிகுந்த ஆர்வத்தை ஏற்படுத்தி உள்ளது. இந்தக் கருத்தரங்கம் தொடர்பாக எழுத்தாளர் அப்பணசாமி முகநூலில் பதிவிட்டதில் இருந்து...

சிந்துவெளி நாகரிகம் குறித்த வரலாற்றுத் துறை உயர் கல்வி கற்பதற்கான ஒரு பாடத்திட்டம் உருவாக்கினால், எப்படி இருக்குமோ அதன்படி தலைப்புகளைத் தேர்வு செய்து அந்தந்தத் தலைப்புகளில் ஆய்வுப்புலமை கொண்ட வல்லுநர்களைக் கொண்டு ஒரு சுருக்கமான அறிமுகத்தை வழங்குவது போன்று அமைந்தது.


தமிழ்நாட்டின் தலைசிறந்த தொல்லியல் அறிஞர்களுடன் சுமார் 300 மாணவக் கண்மணிகளும் கலந்துகொண்டனர். நாமறிந்து இவ்வளவு மாணவர்கள் கலந்துகொண்ட வரலாற்றுக் கருத்தரங்கம் வேறு இல்லை. அனைவரும் வரலாறு, தமிழ், தொல்லியல், மானுடவியல் பாடங்கள் படித்து வரும் உயர்கல்வி மாணாக்கர் என்பதும், இவர்களில் பாதிக்கும் அதிகமானவர்கள் மாணவிகள் என்பதும் கூடுதல் சிறப்பு.

சிந்துவெளியின் முத்திரைகள், கைவினைப் பொருள்கள், சிந்துவெளி மக்களின் பொருள் பண்பாட்டு அம்சங்கள் குறித்தும், சிந்து வெளி பரப்புகளில் பல்வேறு கால கட்டங்களில் வாழ்ந்த மக்களின் வாழ்வியல் எச்சங்கள் மற்றும் அக் காலங்களின் பொருள் பண்பாடுகள் குறித்தும் அவற்றை ஒப்புநோக்கியும் ஏழு உரைகள் நிகழ்ந்தன. முத்தாய்ப்பாக வேதகாலபொருள் பண்பாட்டைக் கட்டுடைப்பு செய்யும் மார்க்சிய காந்தியின் அருமையான உரை நிகழ்ந்தது.

இந்த இரண்டு நாள் உரைகள் அனைத்தையும் தொகுத்துப் பார்க்கும் போது சிந்து வெளி நாகரிகம் குறித்த ஒரு பண்பாட்டு இயங்கியல் பார்வையை நூல் பிடித்த மாதிரி உணர முடிந்தது.

அதனால்தானோ என்னவோ ஒரு அரைச் சங்கியோ முழுச் சங்கியோ உண்மையை மறைப்பதாக 'குய்யோ முறையோ' எனக் கதறியது. அதற்கு 'உண்மையை வெளிக்கொண்டுவருவதற்காகத்தான் இந்த முயற்சி அச்சம் வேண்டாம்', என பதிலும் பகிரப்பட்டது' எனப் பதிவிட்டுள்ளார்.

## :.ப்ளாஷ்பேக்



### நினைவிலிருந்து அகலாத உரை!



எம்.எஸ்.இராமநாதன்

1984-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 8-ஆம் தேதி, திருச்சி மாவட்டம், லால்குடி வட்டம், புள்ளம்பாடியில், பேரறிஞர் அண்ணா சிலை திறப்பு விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கழகத் தலைவர் - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வருகை தந்து, சிலையைத் திறந்து வைத்து உரையாற்றினார். அப்போது, ஒன்றிய இளைஞர் அணி சார்பாக, தலைவர் கலைஞர் அவர்களிடம் கழக வளர்ச்சி நிதியாக, ஆயிரத்து நூற்றி பதினோரு ரூபாய் வழங்கினேன். அவர் பேசும்போது, 'ஒன்றிய கழகத்துக்கு சற்றும் சளைத்தவரல்ல எனும் விதமாக, தம்பி இராமன் நிதி அளித்துள்ளார்' என்று என் பெயரைக் குறிப்பிட்டுப் பேசியது, கழகப் பணியாற்ற இன்றளவும் ஊக்க மருந்தாக அமைந்துள்ளது.

**- எம்.எஸ்.இராமநாதன்,**
**முன்னாள் மாவட்டப் பிரதிநிதி, புள்ளம்பாடி, திருச்சி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### 'விடுதலை' பெயர்!

1935-ஆம் ஆண்டு ஜூன் 27 முதல், வாரம் இருமுறை ஏடாக 'விடுதலை' வெளியாகத் தொடங்கியது. நீதிக்கட்சி சார்பில், தொடங்கப்பட்ட இந்த ஏட்டுக்கு, ஆங்கிலம், தமிழ் மொழியில் சிறந்த புலமை கொண்ட நீதிக்கட்சிச் சிந்தனையாளர்களில் ஒருவரான டி.ஏ.வி.நாதன் முதல் ஆசிரியராக இருந்தார். 'விடுதலை' எனும் பெயரைத் தேர்வு செய்து நீதிக்கட்சிக்கு வழங்கியதும் அவர்தான். இந்த தகவலை ஏ.வி.பி.ஆசைத்தம்பியின் 'தனியரசு' இதழ் உறுதி செய்துள்ளது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

715

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.